★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

பொருளாதார ரீதியிலும் இணைப்பாம்!

பொருளாதார ரீதியான இணைப்பையும் இந்தியாவுடனேயே வைத்துக்கொள்வது என்று காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறதாம்.

இந்தத் தீர்மானப்படி, இந்தியாவின் பிரதம கணக்குத் தணிக்கையாளருக்கு, இதர இந்திய மாநிலங்களில் செலுத்தக்கூடியதைப் போன்றே காஷ்மீர் ஜம்முவிலும் அதிகாரம் செலுத்தலாம் என்றும், இதர பகுதிகளைப் போன்றவகையிலேயே காஷ்மீரின் கணக்கு நிர்வாகமுறை இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மலர் 4] சென்னை: ஐப்பசி 30உ வியாழன் (15—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 1உ வெள்ளி (16—11—56) [இதழ் 13

உணவுப் பொருள்களை பதுக்குவோருக்கு!

சிறைத் தண்டனை கட்டாயமாக்கப்படுகிறது

இலங்கை சர்க்கார் முடிவை டெல்லி கவனிக்குமா?

கொழும்பு, நவ. 14—

அத்தியாவசியமான உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை இலாபம்சம் பாதிப்போருக்கு சிறைத் தண்டனை கட்டாயமாக்கப்படும் என்று இலங்கை மந்திரி சபை மேற்கொண்டுள்ள முடிவு, டெல்லிப் பெரிய மனிதர்களின் கவனத்திற்கு உரியது.

இப்போதுள்ள சட்டப்படி இங்கு அந்தக் குற்றத்திற்கு அபராதம் அல்லது சிறை, அல்லது இரண்டும் தண்டனைகளாகும். ஆனால் இனி, உணவுப் பொருளைப் பதுக்குவோருக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் கட்டாயமாக விதிக்கப்படுமாம்.

உணவுப் பொருளைப் பதுக்குவோருக்கு சவுக்கடி தர, நீதி மன்றங்களுக்கு அனுமதி வேண்டும் என்று உணவு மந்திரி கூறிய யோசனையை மந்திரி சபை ஏற்க மறுத்துவிட்டதாம்.

பிரிட்டன் பயமுறுத்தல்

ஐ. நா.-விலிருந்து விலகி விடுவதாகக் கூற்று

லண்டன், நவ. 14—

பிரிட்டன் ஆக்கிரமிப்பு நாடு என்று ஐ. நா. தீர்மானம் நிறைவேற்றினால் மிக மோசமான விளைவுகள் ஏற்படுமென்றும், ஐ. நா.-விலிருந்து பிரிட்டன் விலக நேரிடுமென்றும் தனிப்பட்ட முறையில் ஐ. நா. பொதுச்சபை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும்படி ஐ. நா.-வின் பிரிட்டிஷ் பிரதிநிதிக்கு உத்திரவிடப்பட்டுள்ளதாம்.

45,000 அகதிகள் தவிப்பு

செய்கோன், நவ. 13—

தெற்கு வியட்னாமிலுள்ள பெரிய அகதிகள் முகாமுள்ள கெய்ஸான் எனுமிடத்தில் வீசிய சூறாவளியால் சுமார் 45,000 அகதிகள் வீடிழந்து தவிக்கின்றனர்.

அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்த கல்லூரி ஆசிரியை!

'போலீஸ்' என்ற சொல்லை மிக ஆபாசமானதாக ஆக்கிவிட்டார்கள் என்கிறார்!

லண்டன், நவ. 14—

பேராசிரியர் ஜே. பி. எஸ். ஹால்டேன் என்ற விஞ்ஞானியின் மனைவியான டாக்டர் ஹெலன் ஸ்பர்வே என்பவர், ஒரு போலீஸ்காரரைத் தாக்கியதாகவும் போலீஸ் நாய் ஒன்றினைத் துன்புறுத்தியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, திருமதி ஹால்டேனுக்குஅவர் குடித்திருந்ததற்காக 10 ஷில்லிங்கும், போலீஸ்காரரைத் தாக்கியதற்காக 5 பவுனும் அபராதம் விதித்துத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

ஆனால், அந்த அம்மையாரோ, அபராதம் கட்ட மறுத்துவிட்டு, 2 மாத சிறைத் தண்டனையை ஏற்றுக்கொண்டாராம்!

பெருமை!

அவர் கூறியதாவது:—

"நான் இந்தியா சென்று, அங்கு, 'நானும் பிரிட்டிஷ் சிறையில் வாழ்ந்திருக்கிறேன்' என்று பெருமையோடுகூறி மகிழ முடியும்!

"ஆங்கில மொழியிலேயே 'போலீஸ்' என்ற சொல்லைத்தான், பிரிட்டிஷ் சர்க்கார் மிக ஆபாசமான சொல்லாக்கிவிட்டார்கள். போலீசார் வெறுக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் உணருமாறு செய்வது உருப்படியான ஒரு காரியம் செய்வதாகும் என்று கருதினேன்; அதனால்தான் போலீஸ் நாயைத் துன்புறுத்தினேன்!"

ஐந்துவித கொலைக் குற்றங்களுக்கு மட்டுமே இனி மரண தண்டனை விதிக்கப்படுமாம்!

லண்டன், நவ 14—

களவாடும்போது கொலை செய்தல், கைது செய்வதினின்றும் தப்பிச் செல்லும்போது கொலை செய்தல், போலீஸ் அல்லது சிறை அதிகாரிகளைக் கொலை செய்தல், துப்பாக்கியால் சுட்டு அல்லது வெடிகுண்டு போட்டுக் கொலைசெய்தல், மறுபடியும் கொலை செய்தல்—ஆக இந்த ஐந்துவிதக் கொலைக் குற்றங்களுக்கு மட்டுமேஇனி மரண தண்டனை விதிக்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உணவு உற்பத்திக்குத் தீவிர விவசாயத் திட்டங்கள்

சென்னைக்கு டில்லி தரும் கடன்

புதுடில்லி, நவ. 14—

உணவு உற்பத்திக்கான மூன்று தீவிர விவசாயத் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் ரூ. 25,77,000 சென்னை அரசாங்கத்திற்குக் கடனாக அளிக்க அனுமதி தந்துள்ளனர். இந்தத் தொகை 1956—57ம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள் தளர்ந்தன!

பம்பாய், நவ. 14—

நெல், அரிசி மீது கொடுக்கப்படும் பாங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளை இந்திய ரிசர்வ் பாங்கி திரும்பப் பெற்றுக்கொண்டது.

அறுவடைக்கும் விற்பனை செய்வதற்கும் அவசியமாகத் தேவைப்படும் கடன் வசதிகளைப் பாங்கிகள் அளிப்பதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவிலுள்ள செய்திப் பத்திரிகைகள் ஆண்டுதோறும் 60,000 டன் பத்திரிகைக் காகிதத்தைப் பயன்படுத்தி வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் சர்க்காருக்கு அட்லி எச்சரிக்கை!

பெல்பாஸ்ட், நவ. 14—

பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் அட்லி இன்றிரவு இங்கு பேசுகையில், 'நல்ல புத்தியுடன் பிரிட்டன் நடந்துகொள்ளாவிட்டால், இந்தியாவும் பாகிஸ்தானும், காமன் வெல்த்திலிருந்து வெளியேறிவிடக் கூடும்' என்று தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு 'நேட்டோ' சேனாதிபதி எச்சரிக்கை

பாரிஸ், நவ. 14—

பறக்கும் குண்டுகளை (ராக்கெட்) ரஷ்யா உபயோகித்தால், மேற்கு நாடுகள் பழிக்குப் பழி வாங்கும் என்று ஐரோப்பாவிலுள்ள நேச நாட்டுப் படைகளின் தளபதி எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலை அழித்துவிட வேண்டுமாம்!

பாக்தாத், நவ. 14—

"அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டுமானால், உள்ள ஒரு சிறந்த—முடிந்த வழியெல்லாம், இஸ்ரேலை ஒரு நாடாக இல்லாமல் ஒழித்துவிடுவது தான்,"

என்று, ஈராக் சர்க்கார் கூறியுள்ளதாம்.

இஸ்ரேலுக்கு எண்ணெய் தர ரஷ்யா மறுப்பு

இஸ்ரேலுக்கு எண்ணெய் விநியோகம் செய்வதை ரஷ்யா நிறுத்திக்கொண்டிருக்கிறது.

கடந்த ஜூலை 17-ம் நாள் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தப்படி, 2 கோடி டாலர் பெறுமான எண்ணெய் தருவதாக ரஷ்யா கூறியிருந்தது.

சினாய் பாலைவனத்தில் இஸ்ரேல் புகுந்ததிலிருந்து, ஒப்பந்தப்படி எண்ணெய் தர ரஷ்யா மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

இங்கிலாந்தில் பெட்ரோல் பங்கீடு அமுலாகிறது

லண்டன், நவ. 14—

பெட்ரோல் பங்கீடு சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுவருவதாகப் பிரிட்டிஷ் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளாராம்.

இன்று முதல் பெட்ரோல் பங்கீடு அமுலுக்கு வரும் என்று தெரியவருகிறது.

பெட்ரோல் விலையைக் குறைக்க இயலாதாம்!

புதுடில்லி, நவ. 14—

காப்பு வரிச் சலுகையை பர்மா-ஷெல் கம்பெனி கைவிட்டு இருப்பினும், பெட்ரோல் விலையைக் குறைக்கப்போவதில்லை என்று பண்டித நேரு அறிவித்துள்ளார்.

இந்தியா மீது ஐ. நா. போலீஸ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாம்

காஷ்மீர் தகராறுக்கு பரிகாரம் காண

'ஆசாத் காஷ்மீர்' முஸ்லீம்கள் யோசனை

லாகூர், நவ. 12—

"காஷ்மீர் தகராறைத் தீர்ப்பதற்காக, ஐ நா. சபை போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியிலிருந்து குரல் கிளம்பியிருக்கிறது.

காஷ்மீர் முஸ்லீம் சங்கத்தின் செயற் குழுவினர் நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் காணப்படுவதாவது:—

"கொரியாவிலும் எகிப்திலும் செய்ததுபோல, ஐ. நா. சபை, காஷ்மீர் தகராறைத் தீர்ப்பதற்காக உறுதியோடு போலீஸ் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

"பாகிஸ்தான் சர்க்கார், ஐ நா.-வில் காஷ்மீர் பிரச்சினையை உடனடியாக மீண்டும் கிளப்பி, இறுதியான முடிவு காணுமாறு செய்யவேண்டும்,"

இந்தச் செயற்குழுக் கூட்டத்திற்கு, சங்கத் தலைவரான சர்தார் முகம்மது இப்ராஹீம் தலைமை தாங்கியிருக்கிறார்.

'ஆசாத் காஷ்மீர்' சர்க்கார் தலைவரான சர்தார் அப்துல் கய்யூம், மற்றும் குலாம் அப்பாஸ் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

ஹங்கேரி நிலைமை

ஐ. நா. பொதுச்செயலாளர் புடாபெஸ்ட் செல்வார்

நியூயார்க், நவ. 13—

உணவு, மருந்துவம் போன்ற உதவிகள் அனுப்புவதுபற்றி ஹங்கேரி அரசாங்கத்துடன் நேரில் பேச்சு நடத்த ஐ. நா. பொதுக் காரியதரிசி ஹங்கேரி தலைநகருக்கு செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாம்.

முதலிடம் தரப்படும்

ஐ. நா. சபையில், மத்தியக் கிழக்குப் பிரச்சினைகளை விவாதிக்கும்போது, ஹங்கேரி பிரச்சினைக்கு முதலிடம் கொடுத்து விவாதிப்பதெனத் தீர்மானமொன்று நிறைவேறியுள்ளது.

தொழிலாளர் மறுப்பு

புடாபெஸ்ட், நவ. 13—

'எல்லோரும் வேலைக்குத் திரும்பி வந்துவிடவேண்டும்' என்று ஹங்கேரிய அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளுக்குத் தொழிலாளர் செவிசாய்க்கவில்லையாம்!

ரஷ்யப் படையை வாபஸ் பெற்று, உடனே தேர்தல் நடத்த வேண்டும் என்று அவர்கள் கிளர்ச்சி செய்கின்றனராம்.

ரஷ்யப் போக்கைக் கண்டித்து வேலை நிறுத்தம்

வியன்னா, நவ. 14—

மூடிபோட்ட இரயில் வண்டிகளில் மக்களை ரஷ்யாவுக்குக் கடத்திச்செல்லுகின்றனராம்; இச்செய்கையைக் கண்டித்து ஹங்கேரி இரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்.

விலை குறைவானாலும் 'தரம்' உயர்வு குறையாதே!

புதுடில்லி, நவ. 14—

இந்துஸ்தான் இயந்திரக் கருவி உற்பத்திச் சாலையில், வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் 'லேத்து'களைப் போலவே தயாரிக்கப்படுகிறதாம்.

இதன் விலை ரூ. 32,000 என்றும், இதை வெளிநாடுகளிலிருந்து தருவித்தால் ரூ. 39,000 ஆகிறது என்றும், மத்திய உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு தலைமுழுக்கு

லண்டன், நவ. 14—

ரஷ்யா, ஹங்கேரியில் மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டிக்கும் வகையில், தாங்கள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாக இரு பிரபல தொழிற்சங்கத் தலைவர்கள் அறிவித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15-11-'56 வியாழன்

அவர்களுக்குரிய பரிசு!

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் திராவிட இன மொழிகள் என வழங்கி வரப்படுவனவாகும். தமிழை மூலமாகக் கொண்டு மற்ற மூன்று மொழிகளும் உருவெடுத்தன என்பதற்கு மறுப்பு எதுவும் இதுவரை ஏற்பட்டதில்லை.

திராவிட மொழிகளைப் பேசி வரும் மக்கள் தொடர்ந்தாற்போல் வாழ்ந்துவரும் நிலப்பரப்பை, மொழிவழி மாகாணங்களாகப்பிரித்து அமைத்து, அவ்வாறு பிரித்து அமைக்கப்பட்ட திராவிட நாட்டில், ஒரு திராவிடக் கூட்டாட்சியை நிர்மாணிப்பது என்பதுதான் நாம் கோரும் திராவிட நாட்டின் இலட்சணம்.

திராவிடக் கூட்டாட்சி ஏற்பாட்டிற்கும், மொழிவழி மாகாண அமைப்புக்கும் எந்தவித முரண்பாடும் கிடையாது. இப்பொழுது ஏற்பட்டுள்ள மொழிவழி அமைப்புகள், நாம் விரும்பும்வகையில் நூற்றுக்கு நூறும் அமைந்திருக்கவில்லையானாலும், நாம் பெரிதும் மகிழ்ந்து வரவேற்கத்தகுந்த நிலையிலேயே அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதில் நமக்குத் துளியும் ஐயமில்லை.

மொழிவழிக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து மாகாணங்களைத் திருத்திஅமைக்கப்போவதில்லை எனக் கூறிக்கொண்டே, திராவிடத்தைப் பொறுத்தவரையில் மொழிவழிக் கோட்பாட்டிற்கே தம்மை வேண்டா வெறுப்பாக ஆளாக்கிக்கொண்டிருக்கிறது இந்தியப் பேரரசு என்பது, இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மொழிவழி அமைப்புகளினால் விளக்கமாகிறது.

மொழிவழி அமைப்புக்காக முழு மூச்சுடன் போராடியவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்தவர்கள் ஆந்திரர்கள் தான் என்ற உண்மையை, வெறும் பகட்டுப் பேச்சால் மறைத்துவிட முடியாது. அதற்கு அடுத்தபடியாக மொழிவழி ஏற்பாட்டிற்கு மும்முரமாக ஈடுபட்டவர்கள் கன்னடர்தான் என்ற உண்மையையும், அழுக்காறு கூச்சலால் மாற்றிவிட முடியாது.

மொழிவழி ஏற்பாட்டிற்குக் கேரளத்தாரும், தங்களால் இயன்றவரையில் போராடியே வந்தனர். அந்த உண்மையையும் மறைத்துவிடுவதில் வெற்றி காண்பது என்பது எவராலும் முடியாது.

திராவிட மொழிவழி வந்த ஆந்திரமும், கன்னடமும், கேரளமும் மொழிவழிக் கோட்பாட்டின்படி பிரிக்கப்பட்டு விட்டால் எஞ்சியிருப்பது தமிழகமேயாகும். மூன்று மொழிவழியினர், மொழிவழிக் கோட்பாட்டிற்காகப் போராடிக் கொண்டிருக்கும் பொழுது, தமிழ் மொழிவழி அமைப்புக் கோரி, தமிழ் மக்கள் சார்பில் போராடித் தீரவேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு இல்லாமலே போகிறது. எனவே தமிழ் மக்கள் தமிழ் அமைப்பு பெறுவது என்பது, மற்ற மூன்று இன மொழியினர் மேற்கொள்ளும் கிளர்ச்சியின் வெற்றிதோல்வியைப் பொறுத்திருக்கிறது.

கேரளத்தாரும், ஆந்திரரும், கன்னடத்தாரும் மொழிவழி அமைப்புக்காகப் போரிட்டு அடைகிற வெற்றியின் உள்ளடக்கமாகத் தமிழக அமைப்பும் அடங்கி இருக்கின்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்திருக்கும் எவரும், தமிழகம் கோரித் தங்கள் காலத்தையும் முயற்சியையும் வீணாக்கிக் கொள்ள விரும்பமாட்டார்கள். ஆனால், தமிழகத்தில் நியாயமாக இருந்து தீரவேண்டிய பகுதிகள், தமிழகத்திலிருந்து பறிக்கப்படாமல் இருப்பதில் மட்டும் விழிப்பாக இருந்து, தமிழகத்தைப் பாதுகாத்து வரும் பணியில் அவர்கள் நாட்டம் செலுத்துவர். அப்பொறுப்பான பணியைத்தான் நமது கழகம் வாய்ப்பு நேர்ந்த பொழுதெல்லாம் செயலாற்றி வந்துள்ளது.

மொழிவழிக் கோட்பாட்டை தனது அரசியல் இலட்சியங்களில் ஒன்றாகக் காங்கிரஸ் கட்சி கொண்டிருந்தது. அந்த இலட்சியத்தை நிறைவேற்றிவைக்க வேண்டிய கடமையும் அதிகாரமும் அக்கட்சிக்கே இருந்து வந்தன. எனவே, அக்கட்சியைச் சேர்ந்தவர்களே மொழிவழி அமைப்பை வலியுறுத்தி வரும்பொழுது, மற்றவர்கள் வலியச் சென்று அக்கருத்தை வற்புறுத்த முன்வருவது அவசியமற்றது — அர்த்தமற்றது. இதற்க,

மொழிவழி கோட்பாட்டைக் கைவிட்டு, இருமொழி ஏற்பாட்டுக் கருத்தை காங்கிரசுத் தலைமை வற்புறுத்தத் தொடங்கியது. இந்தக் கருத்து மாற்றத்தின் விளைவாகத்தான் தட்சிணப் பிரதேச அவலட்சணக் கருத்து பிறந்தது.

தட்சிணப் பிரதேசப் பிறப்பின் இலட்சணம் இதுவாக இருக்க, இதை நமது திராவிட நாடு கோரிக்கையின் எதிரொலி எனப் பழித்துக் கூற சிலர் முன்வந்து இருக்கிறார்கள். அவர்கள்தான், தமிழக அமைப்பு திராவிட நாட்டமைப்புக்கு உலை வைத்துவிட்டது எனப் பிதற்றவும் செய்கிறார்கள்.

மொழிவழி அமைப்பு திராவிடநாடுக் கூட்டாட்சி இலட்சியத்துக்கு ஊறு தேடுவதல்ல என்ற உண்மையை, இனியாவது அவர்கள் தெரிந்து கொண்டு வாய்மூட வேண்டும். வழக்கப்படியே அவர்கள் தொடர்ந்து வம்பு பேசி வருவதானால், அதைத் தாராளமாகத் தொடர்ந்து அவர்கள் செய்து வரட்டும். தமிழ் மக்கள் முன்னிலையில், அடிப்படையற்ற தங்கள் அரசியல் கூற்றை, தாங்களாகவே காட்டிக் கொள்ள அவர்கள் விரும்புவதை, நாம் ஏன் தடுக்கவேண்டும்? தாங்களே தெரிந்து அதற்குரிய பரிசை அவர்களுக்கு அளிக்கக்கூடிய ஆற்றலும் அறிவும் தமிழ் மக்களுக்கு இயல்பாகவே இருக்கும் பொழுது, அவர்கள் வம்பளப்புபற்றி நாம் கவலைகொள்ளத் தேவையே இல்லை.

மார்ச் முற்பகுதியில் பொதுத் தேர்தல்?

புதுடில்லி, நவ. 13—

1957-ம் ஆண்டு மார்ச் முற்பகுதியே பொதுத் தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற காலமாகும் என்று இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகள் சில ஒருமனதாகக் கருதுகின்றனவாம். திட்டமான தேதிகளை, பிரதம தேர்தல் கமிஷனர் பின்னர் நிர்ணயிக்கக்கூடும்.

சோஷலிஸ்டுக் கட்சி தேர்தல் சின்னம்!

இலட்சுமணபுரி, நவ. 13—

இந்திய சோஷலிஸ்டுக் கட்சி 'மரத்தை'த் தனது முதல் தேர்தல் சின்னமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

வெளியேறுவதற்கு ஒரு நிபந்தனை?

பாரிஸ், நவ. 13—

'சூயஸ் கால்வாய் பகுதியிலுள்ள முக்கியமான இடங்களில் சர்வதேசப் படை வந்து பொறுப்பேற்ற பிறகுதான் பிரிட்டிஷ்—பிரெஞ்சுப் படைகள் அங்கிருந்து வெளியேறும்,' என்று பிரெஞ்சு அயல்நாட்டு அமைச்சர் பினே கூறியுள்ளார்.

ஆண்களை விடப் பெண்கள் அதிகமாம்!

வாஷிங்டன், நவ. 13—

பெண்கள் தொகை, ஆண்களை விட வேகமாக வளருகிறதாம் அமெரிக்காவில்!

அமெரிக்காவில் ஆண்களைவிட 13,81,000 பெண்கள் அதிகம் இருப்பதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கழகம் கணக்கிட்டிருக்கிறதாம்!

ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக 6,00,000 பெண்களே அதிகம் இருந்தனராம்!

தீண்டாமைஒழிப்புக்கு ரூ. 3 கோடியாம்!

சிம்லா, நவ. 12—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தீண்டாமையை ஒழிப்பதற்கான பணியில் ஈடுபடும் மாநிலங்களுக்கும், நிறுவனங்களுக்கும் மத்திய அரசாங்கம் ரூ 3 கோடி மானியம் உதவி அளிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக உள்நாட்டு விவகார அமைச்சர் தத்தார் தெரிவித்துள்ளார்.

நெற்பயிர் வளர்ச்சி

துரிதப்படுத்துவதற்குப் புதிய இரசாயனப் பொருள்

லண்டன், நவ 12—

'இப்பரெல் லீக் ஆசிட்' என்ற புதிய இரசாயனப் பொருள் பயிர்களின் வளர்ச்சியைத் துரிதப் படுத்தும் என்று கூறப்படுகிறது. ஒருவித 'காளானு'ல் பாதிக்கப்பட்ட நெற்பயிரிலிருந்தே இந்தப் பொருள் கிடைக்கிறது.

நெற்பயிர்கள் வளர்ச்சியை அபாரமாக வளர்க்கும் சக்தி இந்தப் பொருளுக்கு இருக்கிறது.

2-அடி உயரம் வளரும் ஒருவித அமெரிக்கத் தானியம் எட்டு அடி உயரம் வளர்கிறதாம்.

எத்தியோப்பிய மன்னரின் நன்கொடை

காசி, நவ. 13—

எத்தியோப்பியமன்னர் ஹெய்லி செலாசி காசி இந்து பல்கலைக் கழகத்திற்கு ரூ 1 இலட்சம் நன்கொடையளித்துள்ளாரெனத் தெரியவருகிறது.

சென்னை பொறியியற் கல்லூரியில் முத்தமிழ்க் கலை விழா துவக்கம்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 'இலக்கிய இன்பம்' வழங்கினர்

சென்னை, நவ. 14—

சென்னை—கிண்டி பொறியியற் கல்லூரித் தமிழ் மன்றத்தவர், நேற்றும், இன்றும், நாளையுமாக மூன்று நாட்கள் முத்தமிழ்க் கலை விழாக் கொண்டாடுகின்றனர்.

முதல் நாள் விழா நேற்று மாலை 5-30 மணிக்கு, மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த கல்லூரி மண்டபத்தில் சிறப்பான முறையில் துவங்கிற்று.

விழா நடைபெற்ற மண்டபம் மாணவர் பெருங்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

விழாவிற்கு சென்னை மாணவர் மன்றத் தலைவரும், சென்னை தமிழாசிரியர் கழகத் தலைவருமான புலவர் மயிலை சிவ-முத்து அவர்கள் தலைமை தாங்கினர்.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' எனும் தலைப்பில், தமிழ் இலக்கியத்தில் காணப்பெறும் இன்பத்தைத் தீந்தமிழில் தெளிவுற—நயம்பட விளக்கினர்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களை மாணவர் கற்று, அதன் வழி நடந்து, எதிர்காலத் தமிழகத்தை நல்லமுறையில் உருவாக்கப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தலைவர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் தமிழ் மன்றச் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இறுதியில், மன்றச் செயலாளர் தோழர் ம. இலிங்கப்பன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

மீனவர்களுக்கு வசதி தருவதற்குத் திட்டமா?

ரூ. 8,000 விலையுள்ள இயந்திரப் படகுகள் தயாரிக்கப்படுமாம்

சென்னை, நவ. 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மீனவர்களுக்கான 100 சிறு ரக இயந்திரப் படகுகள் கட்டும் துறையை தூத்துக்குடியில் நிறுவுவதற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளதாம். 'வாடகை—விற்பனை' அடிப்படையில் இந்தப் படகுகள் மீனவர்களுக்கு விநியோகிக்கப் படும்! ஒவ்வொரு படகின் விலையும் சுமார் ரூ. 8,000 ஆக இருக்குமாம்.

டில்லி — கல்கத்தா பிரிவு இரயிலில் சினிமா!

சினிமா காட்டும் சாதனம் பொருத்தப்பட்ட இரயில் வண்டிகள் கிழக்குப் பிராந்திய இரயில் வேயில் முதன் முறையாக ஓடுமாம்; ஹௌரா—டில்லி ஜனதா எக்ஸ்பிரஸ் வண்டிகளில் இப் பெட்டிகள் இணைக்கப்படுமாம்.

மொத்தம் 4 காட்சிகள் காட்டப் படுமாம்; ஒவ்வொரு காட்சிக்கும் 60 பேர் வீதம் அனுமதிக்கப்படுவார்களாம் சினிமா கட்டணமாக 2 அணா வாங்கப்படுமாம்.

அரசாங்கத் தண்டுப் படங்கள், சமூக, கல்வி சம்பந்தமான படங்கள் காட்டப்படுமாம்.

ஒலியைவிட இரு மடங்கு வேகத்தில் பறந்ததாம்!

கலிபோர்னியா, நவ. 14—

அமெரிக்க ஜெட் விமானமான 'நார்த் அமெரிக்கன் 107' ஒலியைப்போல இரு மடங்கு வேகத்தில் பறந்ததாக 'டைம்ஸ்' இதழ் கூறியுள்ளதாம்! இதற்கு முன் இதனைப் போன்ற மற்றொரு விமானம் மணிக்கு 1,300 மைல் வேகத்தில் பறந்துள்ளதாகவும் அதே இதழ் கூறியுள்ளது.

500 கிடங்குகள்

புதுடில்லி, நவ. 12—

தேசியக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் கட்டுவது சம்பந்தமாகப் புதிதாகக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. நாடெங்கிலும் ஓராண்டில் 500 கிடங்குகளைக் கட்டுவதுதான் இந்தக் குழுவின் உடனடியான நோக்கமாக இருக்குமாம்.

ஜாப் உருக்கு ஆலைக்கு தென்னிந்திய இரும்புக் கனிகள்

டோக்கியோ, நவ. 12—

தென்னிந்திய இரும்புக் கனி வளங்களுக்கும் ஜப்பான் உருக்குத் தொழிலுக்குமிடையே இணைப்பு உண்டாக்க இந்தியா விரும்புவதாக ஜப்பானுக்கு இந்தியக் குழு ஒன்று யோசனை கூறியுள்ளதாம்.

வரும் ஐந்தாண்டுகளில் 90-இலட்சம் டன் இரும்புக் கனி விநியோகம் செய்வதாக ஜப்பானுக்குத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

போலந்தில் புதிய நிலச் சீர்திருத்தச் சட்டம்

பாரிஸ், நவ. 12—

போலந்தில், நிலச்சீர்திருத்தச் சட்டங்களின்கீழ் விவசாயிகள் இவ்வளவு நிலம்தான் வைத்துக்கொள்ளலாம் என்று கட்டுப்படுத்தப்பட்டிருந்ததை ரத்து செய்து நிலத்தை விவசாயிகளுக்கே சொந்தமாக்கும் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாம்!

புகையிலை உற்பத்தியில் இந்தியாவுக்கு முதலிடம்

புதுடில்லி, நவ. 12—

உலகத்திலேயே புகையிலை உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடம் பெற்றுள்ளது; இந்தியாவில் ஆண்டுதோறும் மொத்தம் 55,55,00,000 பவுண்டு புகையிலை உற்பத்தியாகிறதாம்.

அதிக உற்பத்தி செய்வோருக்குப் பரிசு

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, நவ. 13—

விவசாயத் துறையில், அபரிமிதமான உற்பத்திக்கு வழிசெய்யும் வகையில், அதிக உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு பரிசுகள் வழங்குவதென சென்னை சர்க்கார் முடிவு செய்திருப்பதாயும், அதற்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன்?

சென்னை அரசாங்கம் அளிக்குமா?

சென்னை, நவ 13—

விளையப்போகும் தானியத்தின் மீது விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கான ஒரு திட்டம் பற்றிய யோசனை சென்னை அரசாங்கத்திற்கு இருக்கிறதாம்.

ஏழை விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த வட்டியில் கடன் தரப்படும் என்று தெரிகிறது.

மேலும் 600 பஸ்கள் மைசூருக்கு கிடைக்கிறது

மாநில சீரமைப்பின் விளைவு

புதிய மாநில சீரமைப்பின் காரணமாக பம்பாயிலிருந்து 500 பஸ்களும், ஐதராபாத்திலிருந்து 100 பஸ்களும் மைசூருக்குக் கிடைக்கிறது. 2,500 பஸ் ஊழியர்களும் மைசூருக்கு மாற்றப்படுவோர்கள் என்று தெரிகிறது.

அச்சம் தவிர்ப்பீர்! எதிர்ப்பு கண்டு கவலைப்படாதீர்!

தாய்க்குலம் விழிப்புற — விடுதலை பெற அறிவு இயக்க வழி நடப்பீர்! அறவழி தவருதீர்!

மகளிர் மன்றத் துவக்க விழாவில் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், டாக்டர் தருமாம்பாள், அருண்மொழி, சத்தியவாணிமுத்து பேச்சு

அண்மையில் நடைபெற்ற மகளிர் மன்றத் துவக்கவிழாவில், மன்றத்தைத் துவக்கிவைத்து மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத் தம்மையாரும், தலைமை தாங்கிய டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும் ஆற்றிய சொற்பொழிவின் சாரமும், தோழியர்கள் அருண்மொழி-[illegible], சத்தியவாணிமுத்து ஆகியோரின் பேச்சுச் சுருக்கமும் கீழே [illegible]கின்றன :—

மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார்

“மகளிர் மன்றம் ஆற்றவிருக்கும் பணிகளுக்கான திட்டத்தைக் கண்டேன். இதுபோன்று ஒரு மன்றம் அமைக்க வேண்டும் என்று வெகுநாளாக நான் [illegible]டசியதுண்டு; நடைபெற முடியவில்லை. இப்போது நல்ல திட்டமிடுதோடு, பணியாற்ற மகளிர் மன்றம் ஒன்று தோன்றி [illegible]ப்பது கண்டு எனக்கு மன நிறைந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியாலும் என் உடல் தளர்ச்சியாலும் என்னால் அதிகம் பேச முடியவில்லை.

“நான் மகளிர் மன்றத்தவருக்குச் சொல்லக்கூடியதெல்லாம், நீங்கள் உங்கள் காரியங்களைப் பயப்படாமல் செய்யுங்கள்; திட்டங்களை நிறைவேற்ற அயராது உழையுங்கள்; வெற்றி கிட்டுவது நிச்சயம். இந்தக் காலத்தில் சற்று விழிப்பு ஏற்பட்டிருக்கிறது; என்றாலும், உங்கள் பணிகளுக்குக் குறுக்கே தடைகள்—எதிர்ப்புகள் பல வரலாம்; அவற்றையெல்லாம் கண்டு கலங்காதீர்கள்; பயப்படாமல் பணியாற்றுங்கள்.

“நான் ஒருகாலத்தில், தேவதாசி முறையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டு வெற்றி கண்டேன்” என்று வரவேற்புரையில் குறிப்பிட்டனர்; பெண்கள் இந்த நாட்டில் மதத்தின் பெயரால்—கடவுளின் பெயரால்—சமுதாயக் கட்டுப்பாடுகளின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகளாக வாழ்ந்துவந்தனர்—வருகின்றனர்.

“அந்த நாட்களில் பொட்டுகட்டிவிடும் தேவதாசி முறையை ஒழிப்பதற்காக என்னைப் போன்றவர்கள் முயற்சித்த நேரத்தில், தனவந்தர்கள்—வைதீகர்கள் — ஆண்கள் — சீர்திருத்தப்படவேண்டிய இளம் பெண்களின் தாய்மார்கள்—இவர்கள் அத்தனைபேரும் கூட்டாகச் சேர்ந்து எதிர்த்தனர். அந்த எதிர்ப்புகளை எல்லாம் தாங்கிக் கொண்டுதான் பாடுபட்டோம்; பயப்படாமல் பணியாற்றினோம். பலன் கிட்டாமலா போய்விட்டது?

“தாசிகளாக இருப்பது பெருமைக்குரியது என்று எண்ணிக் கொண்டிருந்த பெண்களை, அப்படியிருப்பது வெட்கப்படவேண்டிய ஒன்று என்று எண்ணுமாறு மாற்றுவது என்பது சுலபமானதல்ல! வீடு வீடாகச் சென்று இந்தச் சீர்திருத்தத்திற்காக அன்று பாடுபட்டோம்.

“அப்படி நாங்கள் பணியாற்றிய காலத்தில், பெரியார் இராமசாமி, டாக்டர் நாயுடு போன்றவர்கள் எங்களுக்குப் பல உதவிகளைச் செய்தார்கள்; என்றாலும், தொல்லை தரும் பலரும் இருந்தனர்; இடைஞ்சல் செய்வோர் ஏராளமாக இருந்தனர்.

“ஒரு பெண்ணை மீட்டுக்காப்பாற்றினேன் என்பதற்காக ‘50 ஆயிரம் ரூபாய் பெறுமான சொத்துக்காக அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டேன்,’ என்று வழக்குப்போட்டார்கள்.

“இப்படி எல்லாம் இடைஞ்சல் செய்தும், நாங்கள் பயப்படாமல் பணியாற்றினோம். அந்த ஒரு கொள்கையிலாவது வெற்றி கண்டோம்.

“அதுபோல, இந்தக் காலத்திலும் மாதர் குலம் மறுமலர்ச்சி பெற, இந்த மகளிர் மன்றம் பயப்படாமல் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது வெற்றி நிச்சயம் என்று உறுதி கூறுகிறேன்.”

டாக்டர் தருமாம்பாள் அம்மையார்

மகளிர் மன்றத் திறப்பு விழாவில் தலைமை தாங்கி, டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“எல்லோரையும் பார்க்கவேண்டும் போலிருந்தது; அதனால்தான், கூட்டத்திற்குத் தலைமை வகிக்கச் சம்மதித்தேன். கடந்த ஐந்தாறு மாத காலமாகவே என்னால் எழுந்து நடமாட முடியாதபடி உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

“மகளிர் மன்றம் வேலை செய்யத் துவங்குவதைக் காணவேண்டும் என்ற ஆசை எழுந்தது; வந்தேன். மேலும் அண்ணா அவர்களின் சொற்பொழிவு கேட்டு நெடுநாட்களாகிவிட்டன ‘யாழினிது குழல் இனிது என்பர், தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்’ என்பது குறள். அண்ணா, எனக்கு மகன் போல! அந்த மகனின் சொற்பொழிவு கேட்டு மகிழும் வாய்ப்பு நெடுநாட்களுக்குப் பிறகு இன்று தான் கிடைக்கிறது என்பதால் தான், தள்ளாத உடல் நலிவையும் பொருட்படுத்தாமல் ஓடிவந்தேன்.

“பெண்களுக்குள் ஒரு ஒற்றுமை உருவாகிவிட்டால் எந்தக் காரியத்தையும் செய்யலாம். இந்த ஒற்றுமை உருவாக்கப்பட வேண்டுமெனப் பல காலமாக முயற்சித்து வந்திருக்கிறோம். இன்று மகளிர் மன்றம் அமைந்திருப்பதின் மூலம் அந்த ஒற்றுமை உருவாக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் இனி இந்த மகளிர் மன்றத்தை மேன்மேலும் வளர்ப்பதின் மூலம், தங்களது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள வேண்டும்.

“பொதுவாக நமது பெண்களுக்கு எந்தக் காரியத்தையும் துணிந்து செய்வதற்குப் பயம் ஏற்படுகிறது. இந்தப் பயம் ஏற்படக் காரணம், பெண்களுக்கு நம் நாட்டில் கல்வி தருவதே பாபம் என்று கருதப்பட்டு வந்ததுதான்; கல்வி தரப்படாததினால்தான் பெண்கள் பயங் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

“படித்திருக்கிற பெண்கள்கூட சமூகக் கட்டுப்பாடுகளுக்குப் பயந்து பத்திரிகை படிக்கக்கூடப் பயப்படுகிறார்கள்; அரசியல் தெரிந்து கொள்ளப் பயப்படுகிறார்கள்; இந்தப் பயத்தை முதன் முதலில் பெண்கள் விட்டொழித்தாகவேண்டும்.

“இப்படி ஒற்றுமையோடு, பயம் விட்டு, அச்சம் நீங்கி, அண்ணா அவர்கள் காட்டுகிற பாதையில் மகளிர் மன்றம் பணியாற்றுமானால் பெண் குலம் விடுதலைபெறும்—வாழ்வுபெறும்.”

அருண்மொழி-வில்வம்

“மகளிர் மன்றம் துவக்கப்படும் இந்த மகிழ்ச்சி நிறைந்த விழாவில் நாம் ஒன்றைக் கவனித்தாக வேண்டும்.

“தமிழ் நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவோம் என்று கூறிடும் சிலர், தமிழ்ப் பெண்களைத் தவறான வழிக்குத் திருப்பிவிடும் போக்கினைக் காண்கிறோம். இந்தச் சமயத்தில், நாம் தோற்றுவித்துள்ள மகளிர் மன்றம், இந்த நாட்டுப் பெண்கள் கடைத்தேற மிகச் சரியானதோர் வழிகாட்டுவதாக இருக்க வேண்டும்.

“பெண்கள், காங்கிரசைத்தான் சார்ந்தவர்கள்; காங்கிரசைத்தான் ஆதரிப்பார்கள் என்று சிலர் பேசி வருகின்றனர். இந்தப் பேச்சுக்கள் எல்லாம் பொய்யானவை என்பதை நிரூபிக்க, தேர்தல் நெருங்கும் இந்த நேரத்தில், மகளிர் மன்றம் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும்.

“இன்றையப் பெண்களின் இழிவான நிலைக்குக் காரணமான பிற்போக்காளர்களின் கூடாரம் இந்தக் காங்கிரஸ்தான் என்பதை அம்பலப்படுத்தியாக வேண்டும்.”

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை-ஓட்டேரி தி. மு. க. கூட்டம்

தோழர்கள் பலர் விளக்கவுரையாற்றினர்

சென்னை, நவ. 14—

கடந்த 11-11-56 மாலை 6 மணியளவில் சென்னை ஓட்டேரி 19-வது வட்ட தி. மு. கழகக்கிளையின் சார்பில் கழக அமைப்பு நாள் விழா சிறப்பான முறையில் நடைபெற்றது.

விழாக் கூட்டத்திற்குத் தோழர் பெருமாள் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப் பின்னர், தோழியர் மாணவி சற்குணா சிறிது நேரம் பேசியபின், தோழர் இராவணன் எதிர்க்கட்சியாளரை இழிவாகப் பேசும் காமராசரின் போக்கினை வன்மையாகக் கண்டித்துப் பேசினர்.

பின்னர், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி, விருதுநகர் தியாகி சங்கரலிங்கனர் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அடுத்துத் தோழர் எ. எஸ். வேணு தமிழ் நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைக்காத காமராசர் சர்க்காரின் கையாலாகாத்தனத்தை எடுத்துக் காட்டி, இந்த நாட்டில் நல்லாட்சி நிலவ மக்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு சிறிது நேரம் பேசினர்.

பின்னர் தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள் தி. மு. கழகத்தின்மீது மக்கள் கொண்டுள்ள தொடர்புகளைச் சுட்டிக் காட்டியும், தமிழ் மக்களுக்குக் காமராசர் சர்க்கார் இழைத்தத் துரோகத்தையும் அநீதியையும் விளக்கிப்பேசினர்.

இறுதியில் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள் கழகத்தின்மீது காங்கிரசார் அபாண்டமாகப் பழி சுமத்தி வருவதையும், அவ்வாறு பழி சுமத்தி கழகத்திற்கு இழுக்குதேட நினைக்கும் காங்கிரசாரின் போக்கு, காங்கிரசுக்கு இதுகாறும் இருந்துவந்த மதிப்புக்கும் கண்ணியத்திற்கும்தான் மேலும் இழுக்கு தேடித்தரும் என்று எச்சரிக்கும் முறையில் சொற்பொழிவாற்றினர்.

பொதுக்கூட்ட இறுதியில் வள்ளுவர் மன்றச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதியாக ரூ. 8—ம், மகளிர் மன்ற வளர்ச்சிக்கு ரூ. 8-ம் அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் உண்டியல்மூலம் ரு 5—4—9 தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு வசூலிக்கப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின் கிளைச் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

விழாவையொட்டி வட்டத்தின் வீதிகளெல்லாம் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பொதுக் கூட்டம் நடைபெற்ற இடம், மழையின் காரணமாகப் பொதுமக்கள் உட்கார முடியாத வகையில் இருந்தும், கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் மிக அமைதியுடனும் ஆர்வத்துடனும் நின்று கொண்டே கருத்துரையைக் கேட்டனர். (ச.நி.)

மேலச்சேரி தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா

தென்ஆற்காடு மாவட்டம் மேலச்சேரியில் 9-11-56 மாலை தி. மு. கழகச் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது-வழக்கறிஞர் வி. கோபாலர் (கவுண்டர்) எம்.எல்.ஏ., தலைமை வகித்தார்.

துவக்கத்தில் தோழர்கள் ப. உ. சண்முகம், ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., ஆகியோர் பேசிய பின் அண்ணா அவர்கள், பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தரவேண்டியதின் அவசியத்தைக் குறித்து விளக்கியதோடு, கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் காங்கிரஸ் சர்க்கார் செய்துவரும் தவறுகளையும், திராவிடத்தைச் சுரண்டி வாழும் அநீதிகளையும் விளக்கி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

மேலச்சேரியிலும், சுற்றுப்புறங்களிலிருந்தும் இருபதாயிரம் மக்களுக்குமேல் வந்திருந்ததுடன், பெரும் விழாவைப்போல வழியெல்லாம் வளைவுகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தேர்தல் நிதிக்கு ரூ. 25 அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டது.

இவ்வூருக்குச் செல்லும் வழியில் சிங்கவரம் ஊராட்சி மன்றத்தில் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

குந்தா திட்டத்திற்குக் கனடா இயந்திரங்கள்

ரூ. 3½ கோடி மதிப்புள்ளதாம்

சென்னை, நவ. 13—

குந்தா திட்டத்திற்காக ரூ. 3,50,00,000 மதிப்புள்ளஇயந்திரச் சாதனங்களுக்கு அடுத்த சனவரியில் ‘ஆர்டர்’ தரப்படும் என்று தெரிகிறது. கனடிய உதவி திட்டத்தின்கீழ் இந்த இயந்திரச் சாதனங்கள் வரவழைக்கப்படும்.

குந்தா திட்டம் ரூ. 32 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட இருக்கிறது. இது, 1961-ல் பூர்த்தியாகும். இதில் 1,80,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

மகளிர் மன்றத் துவக்கவிழாக் காட்சிகள்

(1) கூடியிருந்த மகளிர் கூட்டத்தின் ஒரு பகுதி; (2) தோழியர் இராணி—அண்ணாதுரை பேசுகிருர்; மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார், டாக்டர் தருமாம்பாள் அம்மையார், சத்தியவாணிமுத்து, செல்லக்கண்ணு அம்மாள், அருண்மொழி, அண்ணா, மதியழகன் முதலியோரைப் படத்தில் காணலாம்.

ரூ. 10 லட்சம் செலவில்

வடநாட்டில் கம்பளி சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவப்படும்

இராஜ்கோட், நவ. 14—

போர்பந்தரில் (சௌராட்டிரம்) கம்பளி சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்று விரைவில் நிறுவப்படும் என்று தெரிகிறது. இதுவே இந்தியாவில் முதலாவதாக நிறுவப்படும் தொழிற்சாலையாகும்.

இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு மொத்தம் ரூ. 10 இலட்சம் செலவிடப்படும்; இதில் ரூ. 6 இலட்சம், தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்குச் செலவிடப்படும்.

தற்போது, ரூ. 5 கோடி பெறுமானமுள்ள கச்சாக் கம்பளி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கு மீண்டும் சுத்தம் செய்யப்பட்ட பின்பு இந்தியாவுக்கு இறக்குமதியாகிறது; ஆகவே, நிறுவப்படும் இத்தொழிற்சாலையினால், இந்தியாவிலிருந்து கச்சாக் கம்பளி ஏற்றுமதி செய்யப்படுவது 50 சதவிகிதமாவது குறையுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

உதவி செய்வதற்குப் பல நாடுகள் முன்வருகின்றனவாம்

புதுடில்லி, நவ. 14—

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொழில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சோவியத் ரஷ்யாவும் வேறு சில நாடுகளும் நீண்டகாலக் கடன் கொடுத்துதவுவதற்குத் தயாராக உள்ளன என்றும், இந்திய அரசாங்கம் விரைவில் இந்த உதவிகளின் தன்மையைப் பரிசீலித்து முடிவு செய்யும் என்றும் மத்திய அரசாங்க உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி தெரிவித்துள்ளார்.

சோவியத் ரஷ்யாதான் மற்ற நாடுகளைவிடப் பெருந்தொகை தருவதாகக் கூறியுள்ளதாம். பிலாய் எஃகுத் தொழிற்சாலைக்கு ரூ. 55 கோடி தருவதாக முன்னமேயே ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.

1,05,000 டன் சிமெண்டு

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்ய இந்தியா ஒப்பந்தம்

புதுடில்லி, நவ. 14—

பாகிஸ்தானிலிருந்து 1,05,000 டன் சிமெண்டை இறக்குமதி செய்துகொள்வதற்கு இந்தியா—பாகிஸ்தான் அரசாங்கங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலியில்கூட்டுறவுநூற்பு ஆலை நிறுவப்படுமாம்!

சென்னைக்கு ரூ. 10 இலட்சம் டில்லி கடன் தருமாம்

புதுடில்லி, நவ. 14—

கைத்தறி நெசவாளருக்கு மலிவாக நூல் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் 9 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு இந்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம். அவற்றில் ஒன்று திருநெல்வேலியில் நிறுவப்படும். இதற்காக மத்திய அரசாங்கம் சென்னைக்கு ரூ. 10 இலட்சம் கடனுதவி அளித்துள்ளதாம்.

ரூ. 110 கோடி மதிப்புள்ள உருக்கு இறக்குமதி?

புதுடில்லி, நவ. 13—

இந்த ஆண்டு மொத்தம் ரூ. 110 கோடி மதிப்புள்ள உருக்கு இறக்குமதி செய்யப்படுமாம்.

அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு இலட்சம் டன் உருக்கு இந்தியாவுக்கு வந்துள்ளது.

தற்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அது இறக்குமதி செய்யப்படுகிறது.

எல்லைத் தகராறுப் பிரச்சினையில் ஓசூரும் இடம் பெறும்?

டில்லி ஆட்சியின் அமைச்சர் ஒருவர் பஞ்சாயத்து செய்துவைக்கப்போகும் சென்னை — ஆந்திரா எல்லைப் பிரச்சினையில், சேலம் மாவட்டத்திலுள்ள ஓசூர் தாலுகா மீது ஆந்திராகொண்டாடும் உரிமைப் பிரச்சினையையும் சேர்த்துக்கொள்வதற்கு சென்னை சர்க்கார் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

மத்திய மந்திரி படாஸ்கர்

எல்லைத் தகராறைத் தீர்க்க மத்தியஸ்தராக நியமனம்

சென்னை, நவ. 14—

சென்னை—ஆந்திர மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறினைத் தீர்ப்பதற்காக மத்திய மந்திரி படாஸ்கர் நடுநிலையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் சென்னைக்கு டிசம்பர் முதல் கிழமை வருவார் என்றும் முதன் மந்திரி காமராசர் கூறியிருக்கிறார்.

படாஸ்கர் சென்னைவரும்போது, ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டியும் சென்னைக்கு வருவார் என்று தெரியவருகிறது.

மூன்று பிரதமர்கள் கூட்டறிக்கை

புதுடில்லி, நவ. 15—

கடந்த மூன்று நாட்களாகப் புதுடில்லியில் நடைபெற்ற கொழும்பு அரசுகள் மாநாட்டிற்குப் பின், பர்மா, இந்தியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் பிரதமர்கள் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனர்; இதில் பாகிஸ்தான் கலந்துகொள்ளவில்லை.

எகிப்திலிருந்து எல்லா வெளிநாட்டுத் துருப்புகளும் வெளியேற வேண்டும் என்றும், ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறுவதற்குத் தாமதப்படுத்துவதைக் கண்டித்தும், அல்ஜீரிய சுதந்திரத் தலைவர்களைப் பிரெஞ்சு அரசாங்கம் கைது செய்ததைக் கண்டித்தும், உடனடியாக ஹங்கேரியிலிருந்து ரஷ்யத் துருப்புகள் வெளியேறவேண்டும் என்றும், எகிப்தில் ஆக்கிரமிப்பாளர் வெளியேறிய பிறகுதான் சூயஸ் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும், ஹங்கேரி மக்கள் விரும்பும் ஆட்சியை நிறுவ வசதி தரவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் காணப்பட்டுள்ளது.

'கல் முதலாளி'யின் ஒரு மாத வருமானம்!

திருமலை, நவ. 12—

திருமலை கோயில் ஏழுமலையானுக்கு அக்டோபர் மாதம் ரூ. 1,92,949-4-6 இந்திய நாணயங்களும், 329–1-6 தோலா எடை தங்கமும், 2,523 தோலா எடை வெள்ளியும், பழைய ரூபாய் நாணயங்கள் 450, சவரன் 9, ரூ 51-க்கு ஒரு செக், ரூ. 440-க்கான 3 கடன் பத்திரமும் உண்டியில் கிடைத்துள்ளதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, 3-10-56 முதல் 13-10-56 வரை நடைபெற்ற உற்சவத்தில் ஏராளமான ரொக்கப் பணமும், பொன், வெள்ளியும் உண்டியலில் விழுந்தனவாம்; அவைகளின் மதிப்பு இதில் சேர்க்கப்படவில்லையாம்.

நெற்கதிரை அடிக்க புதுவிதக் கருவி!

தஞ்சை, நவ. 9—

நெற்கதிரை அடிப்பதற்காக ஜப்பானிலிருந்து ஒருவிதக் கருவியை தஞ்சை மாவட்ட விவசாய இலாகாவினர் தருவித்துள்ளனர். இது எண்ணெய் எஞ்சின் மூலம் இயங்குகிறது. இதுபோன்ற எஞ்சினை நம் நாட்டிலும் தயாரித்துவிட முடியுமாம்.

ஏற்கனவே, களை எடுப்பதற்கு உதவியாக ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்ட கருவியை நம் நாட்டில் மூங்கிலில் தயாரிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

கீழப்பூந்துருத்தி :
வடக்குத் தெரு
(கழகக் கட்டிடத்திற்கு அருகில்)
17—11—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். இளமறையன்
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
அ. பார்த்தீபன்
எ. ஆர். சுந்தரம்
துரை. வையாபுரி

திருக்குறள் வகுப்பு

16—11—56 மாலை 7 மணிக்கு, சென்னை—இராயபுரம், இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத் தொட்டி அட்டபாளையம் பசனைக் கோவிலில், திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

16—11—56 மாலை 7 மணிக்கு, சென்னை — கொருக்குபேட்டை, எண் 15, நாகப்பநாய்க்கன் தெரு, கழகப் பணிமனையில் தோழர் அ. நபிதாசன் தலைமையில் 'நாம் வணங்கும் தெய்வம்' எனும் பொருள் பற்றி கழகத் தோழர்களும், ஏனையத் தோழர்களும் பேசுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சிறப்புக் கூட்டம்

18—11—56 ஞாயிறு காலை 9-30 மணிக்கு
சென்னை கோகலே மண்டபம்

★

தலைவர் :
தமிழவேள் **பி. டி. இராசன்** M.L.A.
அவர்கள்

சிறப்புச் சொற்பொழிவாளர் :
அண்ணா
அவர்கள்

★

பொருள் : 'தோழமை'

நன்கொடை : ரூபாய் ஒன்று

குறிப்பு :—நண்பர்கள் கழக சார்பில் 11—11—56-ல் நடைபெறவிருந்த இக்கூட்டம் 18—11—56-ல் நடைபெறுகிறது. அன்று தேர்தல் நிதி அளிக்கப்படும்.

—நண்பர்கள் கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மகளிர் மன்றத் துவக்க விழாவில் தோழியர் சத்தியவாணிமுத்து பேச்சு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"பெண்களில் சிலர்மட்டுமேனும் தீவிரமான முன்னேற்றம் பெற்றுள்ளனர். தங்களைப் போன்ற சோதரிகளும் முன்னேறவேண்டும்—அதற்காகப் பாடுபடவேண்டும் என்ற எண்ணம், முன்னேற்றம் அடைந்த ஒரு சிலருக்குத் தோன்றியது; அதன் விளைவுதான் மகளிர் மன்றம்.

"திராவிடர் இயக்கம்தான்—நமது தி. மு. கழகம்தான் இன்று சமுதாயத் துறையில் மறுமலர்ச்சிக்கான வித்திட்டுப் பாடுபட்டு உழைத்து வருகிறது.

"இன்று, சமுதாயத்தில் கழகம் தோற்றுவித்துள்ள மறுமலர்ச்சியினால்தான், பெண்களில் சிலரேனும்—ஒரு பகுதியினரேனும் கல்வி பெறவும், ஆண்களைப் போன்றே சகல துறைப் பணிகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

"இன்றைய ஆளும் கட்சியான காங்கிரஸ் தங்களுடைய சுயநலத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள, ஓட்டளிக்க மட்டும் பெண்கள் வேண்டும் என்று கருதுகிற கட்சியாயுள்ளதே தவிர, வேறொன்றும் பெண்களுக்காக—அவர்களின் விடுதலைக்காக—முன்னேற்றத்திற்காக எதுவுமே செய்யவில்லை.

"மற்றும், 'மாதர் சங்கங்கள்' என்ற பெயரில் உள்ள நிறுவனங்களும் எந்த வகையிலும் திராவிடப் பெண்களுக்கு உதவுவனவாக இல்லை.

"ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிரச்சாரம் செய்வதற்காக, கிராமங்களுக்குச் சில பெண்களை அனுப்புகிறார்களே தவிர, பொதுவாகப் பெண்களின் முன்னேற்றத்திற்கு எதுவும் உருப்படியாகச் செய்யப்படுவதில்லை.

"சமுதாயக் கேடுகளுக்கான மூலகாரணத்தின் வேரில் வெந்நீர் ஊற்றினாலன்றி, பெண்கள் விடுதலை பெற்று முன்னேறுவது முடியாத ஒன்றாகும்.

"கடவுள்-மதம்-சாதி முதலியவற்றால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் பெண் குலத்தை விடுவிக்க, காங்கிரசின் வழி நடப்பது பயன் தராது.

"தி. மு. கழகத்தின் வழி நடப்பதே பெண்களின் விடுதலைக்கு வழி செய்வதாகும்.

"பெண்கள் மட்டுமின்றி, ஆண்களும் மகளிர் மன்ற வளர்ச்சிக்கு உதவ வேண்டும்—ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"விழித்தெழுந்துவிட்டால், பெண் குலம் பல அரிய சாதனைகளைச் சாதிக்கும்; அந்தச் சாதனைகளைச் செய்ய வாய்ப்பளிக்குமாறு கோருகிறேன்."

'ஜாதக பலன்'கள் த... செய்யப்படும்?

மக்கள் சபையில் தீர்மானம்

புதுடில்லி, நவ.

பத்திரிகைகளில் 'ஜாதக பலன்'கள் வெளியிடப்படுவதைத் த... செய்ய வேண்டுமென்ற தீர்மானம் ஒன்று, மக்கள் சபையில் கொண்டு வரப்படவிருக்கிறதாம்.

சென்னை 27-வது வட்ட தி. மு. கழகத் துவக்க விழா

பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் கலந்து கொண்டனர்

சென்னை, நவ. 15—

சென்னை 27-வது வட்ட தி மு கழகத்துவக்கவிழாவையும், தமிழக அமைப்பு விழாவையும் ஒட்டி நேற்று மாலை 6-30 மணியளவில், ஒற்றைவாடை அருகில், பிள்ளையார் கோவில் தெருவில் மிகச் சிறப்பானதோர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தெருவெல்லாம், கழகக் கொடிகளும் தோரணங்களும் அழகு செய்துகொண்டிருந்தன.

கூட்டத்திற்குப் பதினாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் இரா. ஆண்டவன் முன்மொழிய, தோழர் மு.வ. வேலவன் வழிமொழிய தோழர் எ த மாணிக்கம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அவரது சிறிது நேரத் தலைமையுரைக்குப் பின் தோழர்கள் அன்புமணி, மணியன் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

அடுத்து தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில், 'தமிழகம் அமைந்த பின்னும் திராவிட நாடு பற்றி நம்புகிறதா, தி. மு. க.?' என்று கேட்கப்படுவதற்குப் பதிலளிக்கும் வகையில் மொழி வழி மாநில அமைப்பு தி. மு. கழகத்தின் இலட்சியத்திற்கு முரண்பட்டதல்ல என்றும், மாறாக, தமிழக—கேரள—ஆந்திர—கன்னட மொழி வழி மாநில அமைப்புகள், தி. மு. க. இலட்சியத்தின் முற்பகுதி ஈடேறுகிறது என்பதைக் காட்டுவதாகும் என்றும் விளக்கம் தந்தார்.

அடுத்தாற்போல், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தின் வளர்ச்சி குறித்தும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் குறித்தும் விளக்கம் தந்ததுடன், தி. மு. கழகம் தேர்தலில் 150 இடங்களில் போட்டியிடும் என்று நாம் மேற்கொண்ட முடிவு மந்திரி சபை வட்டாரத்தைக் கலக்கியிருப்பது குறித்தும், தொடர்ந்து நாம் ஆற்ற வேண்டியுள்ள பெரும் பணி குறித்தும் பேசினார்.

அடுத்து, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழகத்தின் அடிப்படை இலட்சியத்தை விளக்கியும், கழகம் பற்றிக் காங்கிரசாரும் இதரரும், இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டி இழித்துப் பழித்துப் பேசி வருவதைக் குறிப்பிட்டு, அந்தப் பொய்யுரைகளை அம்பலமாக்கி, கழகத்தின் நிலை குறித்து அரிய கருத்து விளக்கமளித்தும் சிரியதோர் சொற்பொழிவாற்றினார்.

துணைப் பொதுச்செயலாளர், பொதுச்செயலாளர் இருவருக்கும், வட்ட அறிவியக்க மன்றத்தின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. மேலும், பொதுச்செயலாளர் அவர்களுக்கு மன்றத்தின் சார்பில் வரவேற்பு இதழ் ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது.

கூட்டத்தில் தி. மு கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 50 தரப்பட்டது.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது. (க. கி.)

மலபார் விசேடப் போலீஸ் படை பிரிவு

திருச்சி, நவ. 14—

கேரளம் தனியாகப் பிரிந்துவிட்டதை முன்னிட்டு மலபார் விசேடப் போலீஸ் படை இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதி கேரளத்தில் இருக்கும்; மீதியுள்ள 12 பிரிவுகளில் திருச்சியில் 6; பழனியில் 2; மதுக்கரையில் 2-ஆக இருக்குமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.